உ

ஸ்ரீவல்லீதேவஸேனாஸமேதஸ்கந்தாயநம:

THE
PONDICHERRY
HINDU
SIVA'SANMARKA
SABHA

ஹிந்து

சிவசன்மார்க்கஸபா

ஸ்ரீவாகீஸமான்மியமென்னுந்திருநாவுக்கரசநாயனார்

சரித்திரநான்குபிரிவினுள் மூன்றாம்பிரிவில்

ஸ்ரீ அப்பூதிநாயனார்சரித்திரம்

இஃது

மளளஸ்ரீ

புதுவை

அ-பெரியசாமிப்பிள்ளை

அவர்களாலியற்றி

மளளஸ்ரீ

சி-மாசிலாமணிசெட்டியாரவர்களது

அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதி ௵

விருத்தம்.

செப்புறுமிவ்வாகீஸமான்மியத்தைத்
திருந்துதமிழ்மணமருவும்புதுவைசார்ந்த
ஒப்பரியநற்புதுப்பாளையத்துவாழும்
உத்தம வைத்தியநாத உபாத்தியார்பால்
அப்புரவுபெறப்பயிலுமாணாக்கர்க்குச்
சொல்லுவித்துத்தூயகலைவல்லோர்மேவும்
அப்பெரியஸபையிலரங்கேற்றிநன்று
வச்சியற்றிஉலகர்தமக்களித்தான்மாதோ.

மற்றவன்யாரெனில்முன்சொல்புதுவைவாழும்
வாய்மைதவறாதசெம்மல்வசுமதிக்கண்
நற்றிறல்சேர்செப்பொருளுமாக்குஞ்சீர்சால்
நயமிகுத்தவிசுவகுலதிலகனாகிக்
கற்றவர்கள்புகழ்முத்துச்சாமிவள்ளல்
கந்தவேள்தனைநாடிக்கனிவாச்செய்த
குற்றமிலாத்தவமொருருக்கொடுவந்தென்னுங்
குருநாத ப்பெயர்வாய்ந்தகுரிசில்மாதோ.

இங்ஙனம்

பு அ பெரியசாமிப்பிள்ளை.

கணபதிதுணை.

ஸ்ரீ வல்லீஸமேதஸ்கந்தாயநம:

சிவ சன்மார்க்க சபா.

ஸ்ரீ வாகீஸமான்மிய மூன்றாம் பிரிவில்

அப்பூதிநாயனார்சரித்திரம்.

விநாயகர் துதி.

வெண்பா.

மாவார் புதுவை மணக்குளத்து மாமுகத்துத்
தேவாவுன் பூந்தாளைச் சிந்தித்து நாவார
ஏத்தவருள் செய்தடியே னின்னலெலா நீக்கியென்றுங்
காத்தருள நிற்கே கடன்.

தரு. இ-ம், சுருட்டி. தா-ம். ஆதி.

பால நேத்ர தேவா எமையிரக்ஷ
காலத்தாள வாவா

சீலத்தமரர் செயும் ஓலத்தைக்கண்டந்த
ஆலத்தையுண்டவனே அருள்புரி (பால)

ஸ்ரீபரமப்பூதி நாயனார் சரிதையை
நேயமா யாம்சொலவே அருள்புரி (பால)

தென்புதுவையிலோங்குஞ் சிவ சன்மார்க்கசபா
இன்பமாய் வாழ்ந்திடவே அருள்புரி (பால)

சூத்ரதார் வந்து வசனம்.

உலகமாவது அறிவுடையபொருளும் அறிவில்லாதபொருளுமென இருவகைப்படும். உலகந்தோன்றி நின்றும் அழியுங் காரணமாயுள்ள ஜடப்பொருளாம். ஆகையால் உலகத்தைப்படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழிலுஞ் செய்தற்கு ஒரு கடவுளிருக்கிறார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும். அவரே சுத்த சாட்குண்ய பரிபூரணராகிய பசுபதி, பசு என்றால்பிறந்திறந்துழல்வதுபதியென்றாலோ

வெண்பா

எல்லாப் பிறப்பும் இறப்புமியற்பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தோஞ் சோணேசர் — இல்லிற்
பிறந்தகதையுங் கேளோம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதையுங் கேட்டிலேம்.

என்றபடி பிறப்பிறப்பில்லாதது மற்றதேவர்களெல்லாம் பிறந்திறந்துழல்வது உண்டென்பது உலகப் பிரசித்தி யாகையாலும் சிவபெருமானுக்கு அஃதில்லை யென்பது வேதாகமங்களே சாக்ஷிகூறுமாகையாலும் அந்தப்பசுபதிநாமம் தனிமுதற்கடவுளாகிய சிவபெருமானுக்கே உரித்தென்று நிச்சயிக்கப்படும் அப்பரமசிவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கிடாக நால்வகைத் தோற்றத்தையும் எழுவகைப் பிறப்பையும் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும். இப்படி பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் தாவர யோனி முதலிய கீழுள்ள யோனிகளெல்லாவற்றிலும் பிறந்து பிறந்து இளைத்து புண்ணிய மேலீட்டினால் மனிதப்பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம் அந்த அருமை ஆராயுங்காலத்து கடலைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலாகும். இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை யெடுப்பினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தைவிட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம் இத்தன்மையாகிய மனிதப்பிறப்பை யுண்டாக்கியது உயிர்க்குயிராகிய பசுபதி நாமத்தனிமுதற் கடவுளாகிய சிவபெருமான் தன்னை அவ்வாத்மாக்கள் திரிகரணங்களாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும்பொருட்டேயாம் இந்தச் சரீரம் கருப்பையில் அழியினும் அழியும், பத்துமாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும் பிறந்தபின் சிலகாலம் வளர்ந்து அழியினும் அழியும் 3 வயதுக்குமேல் 16 வயது வரையிலுள்ள பாலாவத்தையில் அழியினும் அழியும் அதற்குமேல் 40 வயது வரையிலுள்ள தருணவத்தையில் அழியினும் அழியும். அதற்குமேற்பட்ட விருத்தாவத்தையில் அழியினும் அழியும். எப்படியும் இந்தச்சரீரம் அழிவது உண்மையே அழியுங்காலமோ தெரியாதே இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ அதுவுந்தெரியாதே. ஆதலால் இந்தச்சரீரம் உள்

ளபொழுதே சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகியசிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்களிலே விதித்தபடி குருலக்ஷணங் குறைவறவமைந்த* ஆசாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்று கொலை களவு பொய் பிறர்மனை நயத்தல் முதலிய பாவங்கள் செய்தலின்றி இரக்கம் சத்தியம் கொடை முதலிய புண்ணியங்களை உடையர்களாய் விபூதி ருத்ராக்ஷதாரணம் அனுட்டானம் ஸ்ரீபஞ்சாக்ஷரஜெபம் சிவத்தியானம் சிவாலயசேவை சிவலிங்கபூஜை முதலியனவற்றை மெய்யன்போடு செய்து மறுமையில் சிவபெருமானுடைய திருவடி நீழலை யடைந்து நித்தியானந்தத்தை அனுபவிக்கவேண்டும் இவ்வாறு மகேஸ்வர பூசை முதலிய புண்ணியங்களைச் செய்து சிவப்பேற்றை யடைந்தவர்கள் யாராவது உண்டோவெனில் அனேகருண்டு அவர்களுள் சோழமண்டலத்திலே திங்களூரிலே பிராமணகுலத்திலே பிறந்தவராகிய அப்பூதி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவருடைய திவ்விய சரித்திரத்தை இன்றைக்கு நாம் பிரசங்கிக்கப் போகின்றேம். அதிலெம் தமோ குணவசத்தால் கிஞ்சிற்று தவறினுமாயினும் அதை இச்சபையிலுள்ள புண்ணிய புருஷர்களாகிற யாவரும் குற்றம் நோக்காது குணங்களைக்கொண்டு சந்தோஷிக்கும்படியாகவும் இச்சரித்திரம் நிர்விக்கினமாக நிறைவேறும் பொருட்டும் மூவெழுத்தாம் ஓமெழுத்தின் மூவங்கமாயுதித்த தேவ தேவனாகிய விக்கினேஸ்வரரை பிரார்த்திக்கின்றேம்.

தரு, இ-ம் நவரோஜ் தா-ம். ஆதி

சிவ சுத கணபதியே கஜானன
சிவ சுத கணபதியே.

தவமிகுமப்பூதி நவசரிதையைச் சொல
தவறிலாவாக்கருள்வாய் கஜானன சிவ
சேரமான் கயிலையில் சேருமுன் ஔவையைச்
சேர்த்திட்ட வைங்கரனே கஜானனே சிவ
மதிமிகும் சிவசன்மார்க்கசபா யென்றும்
சதுருடன் வாழவருள் கஜானன சிவ

விக்னேஸ்வரர் லலாபை

ச்லோகம்.

"கஜாணனம்பூதகணாதிஸேவிதம்
கபித்தஜம்பூபலஸாரபக்ஷிதம்
உமாஸுதம்சோகவிநாசகாரணம்
நமாமிவிக்னேஸ்வரபாதபங்கஜம்."

வசனம்.

ஹேபிரபோ ஸூத்ரதார் வந்தனஞ் செய்கிறேன்

விக்னேஸ்வரர் வசனம்.

கல்யாண ஸூத்ரதாரா ச்ருணு ஸ்ரீமத் கைலாசாத்ரௌ தேவ கந்தர்வ கின்னர கிம்புருஷ ஸித்த வித்யாதரைஹி ஜனக ஸனந்தன ஸனத்குமார ஸனத்ஸுஜாத பதஞ்சலி வ்யாக்ரபாத கண்வ அகஸ்திய புலஸ்த்யாத்யைஹி ஸம்ஸ்துயமான வைபவஸ்ய அஸ்மஜ்ஜனனீ ஸமேதஸ்ய பாலேந்து சேகர பரமேஸ்வரஸ்ய உத்ஸங்கே பரமானந்தம் ப்ராப்தவந்தம்மாங் கிமிச்சாயா ப்ரார்த்தயஸி.

ஸூத்ரதார் வசனம்.

பிரபோ இப்போது இச்சபையில் ஆரம்பித்திருக்கிற சரித்ரமானது நிர்விக்னமாக நிறைவேறும்பொருட்டு க்ருபைசெய்யவேண்டும்.

விக்னேஸ்வரர் வசனம்.

யதுத்திஸ்யத்வயா ப்ரார்த்திதம் தத்ஸர்வம் நிர்விக்னேன பரிஸமாப்திம்கச்சத் விதிமயா அநுக்ரஹிதம்.

ஸூத்ரதார் வசனம்.

பிரபோ இச்சரித்ர பிரசங்கிகள் கேவலம் அஞ்ஞானிகளா யிருப்பதால் அவர்களுக்கு நல்லஞானம் வாய்க்கும்படி க்ருபைசெய்யவேண்டும்.

விக்னேஸ்வரர் வசனம்.

ஏதநுத்திஸ்ய சதுரானன பத்னீம் பாரதீம் ப்ரார்த்தயா தத்தேவ்ய அனுக்ரஹேண தவமனோரதம் சம்பூர்ணம்பவதி அஹம்கைலாஸாத்ரிம் ப்ரதிகச்சாமி

ஸூத்ரதார் வசனம்

பிரபோ அபிவந்தனம் ஸூத்ரதார்

விக்னேஸ்வரர் வசனம்

கல்யாண கல்யாண

ஸரஸ்வதிஸ்துதி

தரு இ-ம் தேசிகதோடி ஏகதாளம்.

ஸ்வேதபத்மாசனையே க்ருபை செய்வாய்
ஸ்வேதபத்மாசனையே.

ஸ்வேதபத்மாசனீ ஸ்தவஞ்செய்யு நாயேற்குச்
சிவதிருவாக்கருள்வாய் ஸரஸ்வதி (ஸ்வேத)

அப்பூதியடிகளின் ஒப்பருஞ் சரிதையைச்
செப்பிடவாக்கருள்வாய் ஸரஸ்வதி (ஸ்வேத)

நன்மாண்புறுஞ்சிவ சன்மார்க்கமாஞ்சபா
பன்னேக்கமுற அருள்வாய் ஸரஸ்வதி (ஸ்வேத)

சுலோகம்.

"யாகுந்தேந்து துஷாரஹாரதவளா யாசுப்ரவஸ்த்ராவ்ருதா
யாவீணாவரதண்டமண்டிதகரா யாஸ்வேத பத்மாஸநா
யாப்ரும்மாச்யுத சங்கரப்ரப்ருதி பிர்தேவை ஸதாபூஜிதா
ஸாமாம்பாது ஸரஸ்வதி பகவதி நிச்சேஷஜாட்யாபஹா"

வசனம்.

மாதஹ த்வபசரண கமலாப்யாம் ஸூத்ரதார் வந்தனம்,

ஸரஸ்வதி வசனம்

கல்யாண் ஸூத்ரதாரா ச்ருணு சகல சுர லோக மகுட ரத்ந பாஸா நீராஜித சரணா விந்தேன ஸன காதிமுனி கண ஸ்துயமானேன ஸகல ஜகத் ஸ்ருஷ்டி கர்த்ரா கமலாஸனேன ஏகாசனனிவாஸ சுகம் அநுபவபூயமாணு அஹம் த்வதிய திவ்வியஸ்துதி ஸம்பூர்ண கர்ணத்வயா இமாம் ரங்கபூமிம் ப்ராப்தோஸ்மி த்வதாரப்தகர்மணி ஸங்கடஹ கஹ சித்ரம் வத

ஸூத்ரதார் வசனம்

தேவி இச்சரித்திரமானது நிர்விக்கினமாக நிறைவேறும்பொருட்டு விக்கினேஸ்வரரை ப்ரார்த்தித்தேன் அதற்கவர் அவ்வாரேஅனுக்கிரகஞ் செய்தார்.மறுபடியும் நான் இச்சரித்திரப்பிரசங்கிகள் கேவலம் அஞ்ஞானிகளாயிருப்பதால் அவர்களுக்கு நல்ல ஞானம் வாய்க்கும்படி ப்ரார்த்தித்தேன்.அதற்கவர் தேவரீரைநோக்கிப்ரார்த்தித்துஅடையும்படி திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே தங்களை ப்ரார்த்தித்தேன். தாங்கள் கிருபைசெய்ய வேண்டும்,

ஸரஸ்வதி வசனம்

வத்ஸர ஸூத்ரதாரா பூர்வம் பட்டி பாரவி பவபூதி காளிதாஸ ப்ரப்ரு திகாம்யதா அநுக்ரஹோ பூத் தத்வத் தவாபி நாடகே ச்ருங்காராதி நவரஸ உத்பவஹ பூயாதிதி அநுக்ரஸ்ய அஹம்ஸத்ய லோகம் ப்ரதியாமி.

ஸூத்ரதார் வசனம்.
மாதஹ நமஸ்கரிக்கிறேன்.

ஸரஸ்வதி வசனம்
கல்யாண கல்யாண

மோகினிவருதல்

தரு. இ-ம், பருதாரி தா-ம், ஆதி.

சந்த்ரசடாதர சம்போ சதாசிவ (சந்த்)
சந்தமலர்ப்பதந் தந்தென் குறை தீரும்
தனியாள் முன்னேவாரும் (சந்த்)
வேளினைநீறெழ விழித்தப்ரக்யாதனே
வினைதீருநாதனே (சந்த்)
மலைமகளையோர்பால் வைத்தசர்வேசனே
வரந்தருமீசனே (சந்த்)
சிவஸன்மார்க்கசபா தினந் தினமோங்கிடத்
தீவினைநீங்கிட (சந்த்)

வசந்தன்வசனம்

பெண்ணே ஒரு திவ்விய பதம்பாடி நடிப்பாயடி கண்ணே

மோகினி வசனம்.
அவ்வாறேபாடி நடிக்கிறேன் நாதா

தரு. இ-ம், பியாகு. தா-ம் ரூபகம்

ஓ ஓ தேவா என்னைச்சேர சீக்கிரம் வாராய்
வாவா மதனன் செயுமிவ்வாதையைத் தீராய்
அருகில் வந்தோர் முத்தந் தந்தென் ஆசை தீர்க்கிடாய்
உருகி வாடும் என்மனத்தில் உவப்புண்டாக்கிடாய்

வரமிருத்த தேவர் நாளும் வணங்கிடும் பாதா
பரதஞ்செய்யென் மிதிற்கடைக்கண் பாருநாதா॥

வசந்தன் வசனம்

சகி இன்னுமொரு பதம்பாடி நடிப்பாயடி மயிலே

மோகினி வசனம்

அவ்வாறே பாடி நடிக்கிறேனாதா.

தரு, இ-ம்; சுருட்டி, தா-ம், மத்தியாதி

சித்தம் எமாத்தலாமோ இறையே ஒரு
முத்தங்கொடுத் தணைவாய் துரையே (சித்த)

சித்தசன் மலரம்பு தைத்திரு தனத்தினில்
மெத்த வருத்திடுதே எந்தன்
புத்தி மயங்கிடுதே உந்தன்
சித்த மிரங்காமலே (சித்த)

மாவிற்குயிலிதோ கூவியே தாவுதே
காவியம் பிணுங்கையை இப்போ
தாவுகின்றனே மதன் ஐயோ
பாவிநா னென்செய்குவேன். (சித்த)

கைவளை சோருதே மெய்பசப்பேறுதே
வையம் பழித்திடுதே ஐயோ
தையலொருத்தியுமே என்ன
செய்வேனு னயகனே. (சித்த)

என்று இருவரும் உள்ளேபோய்விடுதல்.

சோழராஜன் கொலு.

சேனைத்தலைவன் வந்து சேனைகளை வரும்படி குறிப்பிட
சேனைகள் வரும்போது சொல் கட்டியம்.

சீர்மிகவுருள் திருநீற்றொளிநுதலினிற்றிகழ
திருவளர்மணிமுடிகதிரெனத்தலையினிற் சிறக்க
நார்மிகுபூசுரர் ஆசிகள் மிக மிக நவில
நயமிகுமாதர்கள் யெதிரினில் மயிலென நடிக்க

வர்மிகு விருதுகள் எங்கணும் வரிசையாய் வந்த
இசை மிகு கவிவலர் ஜெயஜெயவென் றேத்தெடுப்ப
கூர்மதிமந்த்ரிகள் அருகினில் நீதிகள் கூற
குவலயம் புகழுமிச் சோழநாடாளுங் கொற்றவாமிருபராக்கு

அரசன் படைகளை பரிசோதிக்க வரும்போது பணிப்பெண்கள்

சொல் தரு, இ-ம் முகாரி தாளம் ஆதி

மணமாரு நற்றரன் கவி — வாணர் புகழ் சீரன்
குணமாருஞ் சோழமன்னவன் — குலாவி வாரார் பாரீர்

பொன்னுநவ மணிகளுமே — பொலியுமுடி தலையில்
மின்னுஞ் சோழநாடாள் மன்னன் — வீதிவாரார் பாரீர்

சாற்றும் பரா பரனை மதி — தங்குஞ் சடா தரனை
போற்றுஞ் சோழ நகராள் மன்னன் — புவியில் வாரார் பாரீர்

கொடையான்எழில்நடையான்ஒளிருடையான் செல்வமுடையான்
படையான் சோழ மன்னனிதோ — பவனிவராரர்பாரீர்

அரசன் சபையில் வந்து கடவுளைத்துதி செய்தல்

விருத்தம்.

திங்களுநதியுங்கொன்றையோ டறுகுஞ்செஞ்சடையினிலணிசிவனே
செங்கரந் தன்னின் மாகமழு வேந்துந் தேவனே கைலைவாழ்பவனே
எங்கணுநிறைந்தே யிலகிடுஞ் சுடரே எந்தையே எம்பெருமானே
சங்கரிநாளுந் தேடருந் திருத்தாட்சங்கரா நின்பதம் போற்றி.

முதல் மந்திரி வசனம்

முப்பானிரண்டறம் தப்பாதியற்றும் மேழியர்வாழும் சோழநாடி தனைப் பரிவுடனாளும் நிருபனே உந்தன் கந்தமலர்போன்ற செந்திருவடியைச் சிந்தைமகிழ்ந்து வந்தனைபுரிந்தேன்.

2 வது மந்திரி

மதமிகுமன்னரை அதமிகச் செய்திந்நகரதை யாளும் மகாராஜனே உந்தன் மருமலர் பதமென் சிரமதிற் கொண்டேன்.

3 வது மந்திரி

அந்தணர் நாளும் ஆசிகள்கூற சிந்தைமகிழ்ந்து செழிப்புடனிருந்தும் மன்னனேஉந்தன் மலரடிதனை என் தலைமிசைக் கொண்டு பலமிகவடர்ந்தேன்.

4 வது மந்திரி

எந்தெழில்மிக்க வேந்தனே உந்தன் மலர்க்கமழ்பதத்தை வணங்கி உய்த்திட்டேன்.

சேனைத்தலைவன்

மன்னர்களணிந்த பொன்னணி முடிகள் துன்னியபதத்தென் தோன்றலே சரணம்.

அரசன்

மதிமிகுஞ் சேனாபதியேயென்றும் வருவதையுரைக்கு மந்திரிகளே அமைத்திடுமுங்கள் ஆசனங்களிலே பொருந்தியிருக்கப் பரிந்துவிடையளித்தனன் இருங்கள் இருங்கள்.

சேர்வை அரசனுக்கு

அனுதினமெங்களை ஆண்டருள்புரியும் மனுமுறை கோணா மன்னனே போற்றி.

1 வது சேவகன்

திங்கள் செஞ்சடையார் சங்கரனடிதாழ் மங்கள குணனே நின்மலரடி போற்றி.

2 வது சேவகன்

அடையலர்தம்மை அடக்கி யிந்நகரையோர் குடைநிழ லாளுமெங் கோவே போற்றி

3 வது சேவகன்

மாலயற் கெட்டா மலரடி முடியுடைக் காலகாலனைத்தாழு மைந்தனே சரணம்

4 வது சேவகன்

மங்களகரமார்மா நகர்தனையாள் எங்கள்தங் கோவே இணையடி சரணம்

அரசன்

சந்ததமெனக்குவந்து நன்மொழி பகர் புந்திகள் மிகுந்த மந்திரிகளே நமதாருநகைக் குரிய சோழவள நாட்டில் மழைவளம் பெருகி பயிர்வளமோங்கிக் குடிவளஞ் செழித்து வருணாச்சிரம தருமங்கள் வழுவாம லிருக்கின்றனவா. அன்றியும் மாலயற்கரிய பாலலோசனனாகிய சிவபெருமானுடைய கோயிலில் நித்திய நைமித்திகங்கள் சிறப்புடன் நடந்து வருகின்றனவா நம்மைப் போற்றிக் கப்பங்கட்ட ஏதமாற்றாசர்களுமுண்டோ இவையெல்லாம் விளக்க உரைப்பீர்களாக.

1 வது மந்திரி

அன்னைபோ லுலகினை ஆதரிக்கின்ற நன்மனமுடைய மன்னனே போற்றி. தாங்கள் தன்ம குணத்தினால் ஆளப்பட்ட இந்நாட்டில் மாதமும்மாரிபெய்து செந்நெல்லெல்லாங் கரும்புகளைப்போலவும், கரும்புகளெல்லாம் கமுகமரங்களைப்போலவும், கமுக மரங்களெல்லாந் தென்னமரங்களைப்போலவும், ஓங்கி வளர்ந்திருக்கின்றன.

2 வது மந்திரி

அந்தணராசி வந்துடன் கூற நேசமாயரசு செய் இராஜனே சரணம். நமது நாட்டின் குடிகள் செல்வத்தாற் குபேரனையும் கல்வியால் அகத்தியனையும், அழகால் மன்மதனையும், பொறுமையால் பூமிதேவியையும், ஜெயித்து தானதருமங்களை அபரிமிதமாகச் செய்து செழித்திருக்கின்றார்கள்.

3 வது மந்திரி

எண்ணிடற்கரிய இம்மண்ணைதயாளும் புண்ணிய சொரூபராகிய எம்பண்ணவலே வந்தனம். நமது நாட்டில் ப்ராம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரரென்னும் சதுர்வருணத்தினரும் ப்ரம்மசர்ய, க்ருகஸ்த்த, வானப்ரஸ்த்த, சன்யாசமென்கிற ஆச்ரமிகளும் அவரவர்கள் ஒழுக்கங்களில் இழுக்கின்றிச்செழிப்புடனிருக்கின்றார்கள்.

4 வது மந்திரி

உத்தம சத்தம குணநிதிதங்கட்காதாரமாய் விளங்கும் புத்தியின் மிகுத்த அத்தனே சரணம். நமது நாட்டில் சிவபெருமானுடைய திருக்கோயிலில் திருவிழாக்கள் வேதாகம விதிப்படி சிறப்புடனடந்து வருகின்றன.

சேனைத்தலைவன்

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கு குணங்களும் எஞ்ஞான்றிருக்குமேந்தலே வந்தனம், நம்மிடத்துள்ள சதுரங்க பலசேனைகளின் தூங்கா முயற்சியாலும் தங்களுடைய புஜ பல பராக்ரமத்தாலும் நமது நாட்டைக் கண்ணெடுத்துப்பார்க்க எண்ணும் திண்மையுடைய பரகமன்னரும் இருப்பார்களோ இருக்கவேமாட்டார்கள்.

அரசன்.

அறிவு மிகுத்த அமைச்சர்காள் நாம் கொலுவுக்கு வந்து க்ஷேமமாய்விட்டபடியால் நமதரண்மனைக்குச் செல்வோம் வாருங்கள்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகளை துதிசெய்தல்

கந்தபுராண விருத்தம்.

பொய்யுரைநூல் சிலர்புகலுந் தியமண்
ணையர்கள்பிணித்துமுன் கடலகத்திடு
வெய்யகற்றோணியாய் மிதப்பமேற்படு
துய்யசொல்லரசர்தா டொழுதுபோற்றுவாம்

மனைவிக்கு வசனம்

பெண்ணே சற்குணி

சற்குணி வசனம்

நாதா

அப்பூதி வசனம்.

நமது பெருவாழ்வாகிய திருநாவுக்கரசு நாயனார் பெயராலேயே சகல தருமங்களையும் செய்துகொண்டு வருகிறோமல்லவா.

சற்குணி வசனம்

ஆம் நாதா.

அப்பூதி வசனம்

அவர்பெயராலே இவ்வளவு தருமங்களிருந்தும் தண்ணீர்ப்பந்தல் ஒன்று மாத்திரம் இல்லாமலிருப்பது என் மனதிற்கோர் குறையாக விருக்கிறது.

சற்குணி வசனம்

சுவாமி தேவரீர் மனதுக்குத் திருப்தியாகும் வண்ணம் நமது குருவாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பெயராலேயே நமது தரும சத்திரத்தி னருகில் ஓர் தண்ணீர்ப்பந்தர் அமைத்தருள்வீராக.

அப்பூதி

அப்பா சிவநேச சிகாமணி.

சிவநேசசிகாமணி.

சுவாமி அடியேன் வந்தனம்.

அப்பூதி

நாம் தண்ணீர் பந்தர் ஒன்று வைக்க வேண்டும் அதற்கு நீ போய் திருநாவுக்கரசு நாயனார் தருமமென்று பெயர் வெட்டி யிருக்கின்ற பாத்திரங்க

ஸையும் அவர் பெயரெழுதிய பலகையையும் சீக்கிரம் எடுத்துக்கொண்டு வருவாயாக.

சிவநேசசிகாமணி

அப்படியே எடுத்துக்கொண்டுவருகிறேன் சுவாமி.

அப்பூதி

அப்பா கருணைப்பிரகாசம்.

கருணைப்பிரகாசம்

அடியேன் இதோ வந்தேன்.

அப்பூதி

கல்மேல் தெப்பமாகக் கரையேறிவந்த நமது குருநாதராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பெயரால் அமைத்திருக்கும் தரும சத்திரத்தின் அருகில் ஓர் தண்ணீர்ப்பந்தரும் அமைக்கப்போகின்றேன் அதற்கு நீ மேதட்டை முதலிய பானாதிகளும் சித்ரான்னங்களும் அப்பவர்க்கங்களும் பழவர்க்கங்களும் சந்தன புஷ்ப தாம்பூலாதிகளும் சீக்கிரம் ஸிட்டப்படுத்துவாயாக.

கருணைப்பிரகாசம்

அப்படியே செய்கின்றேன் சுவாமி.

சிவநேசசிகாமணி அப்பூதிக்கு

தேவர் கட்டளைப்பிரகாரம் பாத்திரங்களும் பலகையும் இதோ கொண்டு வந்தேன்.

அப்பூதி

அப்பா சிவநேச சிகாமணி நமது தரும சத்திரத்தினருகில் ஓர் தண்ணீர்ப்பந்தர் அமைத்து அதன் வாயிற்படியினெதிரில் இந்தப் பலகையைக் கட்டிவைத்து இருங்கள் இதோ நாங்கள் வருகிறோம்.

கருணைப்பிரகாசம் சிவநேசசிகாமணிக்கு

சிவநேசசிகாமணியே பந்தலமைத்துப் பலகையைக் கட்டிப் பாத்திரத்தையெல்லாம் கொண்டுவந்து வைத்தாயா?

சிவநேசசிகாமணி கருணைப்பிரகாசத்திற்கு

ஐயா கருணைப்பிரகாசம் நமது சுவாமிகள் சொற்படி இதோ யெல்லா வேலையைத் தீர்த்துவைத்திருக்கிறேன் உனக்கிட்ட வேலையெல்லாம் நீ முடித்துவிட்டாயா?

கருணைப்பிரகாசம்

எனக்குக் கட்டளையிட்டவண்ணம் திட்டப்படுத்திக்கொண்டுவந்து வை த்திருக்கின்றேன்.

அப்பூதி மனைவிக்கு

பெண்ணே சற்குணி நமது புத்திரர்களோடு சென்று திருநாவு க்கரசு சுவாமிகள் பெயரால் அமைத்திருக்கும் தண்ணீர்ப்பந் தரின் தர்மம் செவ்வையாக நடக்கும்படி திட்டப்படுத்திவிட்டு வரு வோம்வருவாய் பெண்ணே.

சற்குணி

அப்படியே வருகின்றேன் நாதா.

அப்பூதி

அப்பா சிவநேச சிகாமணி தண்ணீர்ப்பந்தரின் வாயிற்படியினெ திரில் திருநாவுக்கரசு நாயனார் தருமமென்று எழுதியபலகையைக் க ட்டிவிட்டாயா?

சிவநேசசிகாமணி

இதோ கட்டியிருக்கின்றேன் வந்து பாருங்கள் சுவாமி.

அப்பூதி

சந்தோஷம் அப்பா கருணைப்பிரகாசம் நேட்டை முதலிய பாத் திகளும் சித்ரான்னங்களும் பலகாரவர்க்கங்களும் சந்தன புஷ்ப தாம் பூலாதிகளும் திட்டப்படுத்தி வைத்திருக்கிறாயா?

கருணைப்பிரகாசம்

தேவர் கட்டளைப்பிரகாரம் ஏலம், சந்தனம், பச்சைகற்பூரம், பா திரிப்பூ, செங்கழுநீர்ப்பூ, என்பவைகளிடப்பெற்ற சுத்தோதகமாகிய பானீயம், பானக முதலியவைகளும் சுத்தான்னம், பருப்புப் பொங்க ல், சருக்கரைப் பொங்கல், மிளகோதனம், புளியோதனம், தத்தியோ தனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந்தோதனம், பாயசமெ ன்னும் சித்ரான்னங்களும், நெய் காய்ச்சுப்பால் தயிர் முதலியவைக ளும், மாம்பழம் வாழைப்பழம், பலாப்பழம், கொடிமுந்திரிப் பழம் முதலிய பழவர்க்கங்களும், மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன் குழல் அதிரசம், தோசை, இட்டலி முதலிய பலகார வர்க்கங்களும் ச

ந்தன புஷ்ப தாம்பூலங்களும் தயாராக வைத்துக்கொண்டு வருகின்ற அடியார்களை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றேன் சுவாமி.

அப்பூதி

ஆகா மெத்த சந்தோஷம் அப்பா சிவநேசசிகாமணி கருணைப்பிரகாசம் நீங்களிருவரும் வருகிற அடியார்களின் இஷ்டப்பிரகாரம் உபசாரத்தோடு நடந்துகொண்டு வருவீர்களாக. நாங்கள் போய் வருகின்றோம்.

சிவநேசசிகாமணி கருணைப்பிரகாசம் இருவரும் வசனம்

அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

அப்பர் சுவாமிகள் அடியார்களுக்கு வசனம்.

அடியார்களே நாம் திருக்கருகாவூர், திருவாலூர், திருப்பாலத்துறை முதலிய ஸ்தலங்களுக்குப் போய் சுவாமி தர்சனஞ் செய்துகொண்டு பின்பு திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு திங்களூரின்வழியாகச் செல்லுவோம் வாருங்கள்.

அடியார்கள்.

அப்படியே வருகின்றோம் சுவாமி.

தண்ணீர்ப்பந்தர்க்காரர் அப்பர்சுவாமிகள்முதலியோரைக்கண்டு சொல்லுதல்

அடியார்களே வந்தனம் வந்தனம் தேவரீர் தயைசெய்து இந்தத்தண்ணீர்ப்பந்தரின் உள்ளே வாருங்கள் இவ்விடத்தில் கேடைமுதலிய பானாதிகளும் சித்ரான்னங்களும் பலகார வர்க்கங்களும் கந்தபுஷ்ப தாம்பூலாதிகளும் இருக்கின்றன தங்களுக்குத் தேவையானவற்றைப் புசித்துத்தாகசாந்தஞ்செய்துகொண்டு இளைப்பாறிப் போங்கள் இவ்வாசனங்களில உட்காருங்கள்.

அப்பமூர்த்தி முதலிய அடியார்கள் தாகத்திற்கு சாப்பிட்ட பிறகு அப்பர்சுவாமிகள்சொல்லல்

ஆகா இதென்ன ஆச்சரியம இந்தத்தண்ணீர்ப பந்தரின் வாயிற்படியிலும்பார்திங்களிலும் நம்முடைய பெயரை யெழுதி யிருக்கிறது. இப்படி நம்முடைய பெயரால இந்தத்தருமத்தை நடத்துகின்றவர்யாரோ தெரியவில்லை எல்லாம் இந்தத் தண்ணீர்ப்பந்தரில் இருப்பவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுவோம். தண்ணீர்ப்பந்தர் வைத்துக்கொண்டு தருமம் செய்யும் புண்ணியவான்களே இந்தத்த

ண்ணீர்ப்பந்தருக்கு திருநாவுக்கரசு நாயனூரென்னும் பெயரிட்டு இந்தத் தருமத்தை நடத்திவரும் புண்ணியபுருஷர் யாவர்

சிவநேச சிகாமணி அப்பருக்கு

சுவாமிகளே திருநாவுக்கரசு சுவாமிகள் என்னும் திருநாமம் இந்தத் தண்ணீரப்பந்தரில் மாத்திரமா எழுதியிருக்கிறது ... ... நினைக்கிறீர்கள் இன்னும் இவ்விடத்தில் எங்குமுள்ள ... ... ள் குளங்கள் திருநந்தனவனங்கள் முதலியவற்றிலும் அப்பூதியடிகள் நாயனூர் என்பவர் திருநாவுக்கரசுநாயனூர் என்னும்பெயராலேயே நடத்திவருகின்றனர்.

அப்பர்

இப்படி அந்த அப்பூதியடிகள் நாயனூர் நம்முடைய பெயரால் தருமங்களெல்லாம் நடத்துவதற்குக் காரணம் யாதோ தெரியவில்லை. ஓ சுவாமிகளே அந்த அப்பூதியடிகள் நாயனூர் எவ்விடத்தி லிருக்கின்றவர்

கருணைப்பிரகாசம் அப்பருக்கு

அவர் இவ்வூரவரே அவர் இப்பொழுதுதான் வீட்டிற்குப் போகின்றார் அவ்வீடிந்தூரமன்றுசமீபமே.

அப்பர் அடியார்களுக்கு

ஆகா, அப்படியா இதோ அந்த புண்ணிய புருஷர் இருப்பிடத்திற்குப் போய் தரிசித்துக்கொள்ளுகிறேன்

என்று அப்பூதியடிகள் வீட்டிற்குப்போக

அப்பூதி யடிகள் அப்பரைக்கண்டு சொல்லுதல்.

சுத்த சைவத் திருவுருவத்துடன் அடியேனைப் புனிதனுக்கும் வண்ணம் அடியேனிருப்பிடம் தேடி வந்தருளிய சுவாமிகளே இவ்வாசனத்தில் உட்காருங்கள் இதோ உமது திருவடியில் வணங்குகின்றேன்.

அப்பர் வசனம்.

சிவ தருமங்களெல்லாந் திரண்டு ஓர் உருவெடுத்தாற்போல விளங்கும் சுவாமிகளே இதோ அடியேனும் தேவர் பொன்னடியிற் பணிகின்றேன்.

அப்பூதி வசனம்.

சுவாமிகளே தேவரீர் இவ்விடத்திற்கு எதுபற்றி எழுந்தருளியது.

அப்பர் அப்பூதிக்கு

நாம் திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு வரும்பொழுது வழியிலே நீர் வைத்த தண்ணீர்ப் பந்தரைக்கண்டும் அப்படியே நீர்செய்திருக்கின்ற பிற தர்மங்களைக் கேட்டும் உம்மைக்காண விரும்பி இங்கேவந்தோம். இது நிற்க சிவனடியார்கள் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரிலே உம்முடையபெயரை யெழுதாது வேறொருவர்பெயரை யெழுதியதற்குக்காரணம் யாது?

என்றவுடன் அப்பூதியடிகள் சொல் தரு. இ-ம். அடாணா, தாளம் ஆதி.

என்ன சொல்லி மறுத்தீர் அடியரே நீர்
என்றன் குருவை வெறுத்தீர்

பொன்னும் பெண்ணும் பூவும் புல்லைப் போலெண்ணித்து
மன்னுஞ் சிவனைப் போற்றும் வாகீசரைப் பழித்து (என்ன)

அப்பர் தரு. இ-ம் தேசிகதோடி தாளம் ஆதி.

ஓகோ இவர் மெய்யன்பை உரைக்கலாகுமோ அம்மா
பாகார்மொழியுமைப் பாகரல்லால் நம்மால் (ஓகோ)

அப்பூதி

அஞ்செழுத்துண்மையை அறிந்தோர்போலவே நின்றீர்
ஐம்புலன்களைமுற்றும் அறவே நீர் தாமோ வென்றீர்
வஞ்சமிலா வப்பரை மதியாமற் போனீரே
மன்னுமன்பில்லாவீண் வார்த்தைக்கு ளானீரே (என்ன)

அப்பர்

என்னிடத்திலேயிவர் யென்ன நலங் கண்டோ
பன்னுநல்லன்பைவைத்தார் பாரிலிவர்போ லுண்டோ (ஓகோ)

அப்பூதி

கற்றூணியாற்கடலைக் கடந்து கரையில் வந்த
கருணாகரரடியைக் கருதாதவர்க ளிந்த
நற்றரையினிலில்லை ஞானியரேநீ ரெந்த
காட்டிலிருந்துவந்தீர் நவில்வீர்எனக்கு முந்த (என்ன)

அப்பர்

அரனிடத்தில்வைக்கும் அன்பையெல்லாம் வேறு
நரன்மீதுவைப்பதுதான் ஞாயமோநீ கூறு (ஓகோ)

அப்பூதி வசனம்.

நீர் நல்ல வார்த்தை யருளிச் செய்திலீர் பாதகர்களாகிய சமணர்களோடு கூடி பல்லவராஜன் செய்த விக்கினங்களை யெல்லாஞ் சிவபக்தி வலுமையினாலே ஜெயித்த பெருந் தொண்டரது திருப்பெயரோ வேறொருவரது பெயரென்றீர்; கெட்டீர்; கெட்டீர்; நமைப்போன்றவர்க்குத் திருத்தொண்டு செய்தலாலே இம்மையிலும் பிழைக்கலாம் என்பதை யென் போலும் அறிவிலிகள் தெளியும் பொருட்டு அருள்புரிந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருப்பெயரை நான் எழுத நீர் இக்கொடுஞ் சொல்லைச் சொன்னீர். கற்றோணியாய்க்கொண்டு கடல்கடந்த அந்த நாயனாருடைய மகிமைகளை அறியாதார் இவ்வுலகில் யாவரிருக்கின்றார்கள். நீர் சிவவேடத்தோடு நின்று இவ்வார்த்தையைப் பேசினீர். நீர் எங்கே யிருக்கின்றவர்?

அப்பர் சுவாமிகள் சொல்லுதல்.

ஆகா உம்முடைய அப்பே அன்பு ஆருகதசமயப் படுகுழியில் நின்றும் கரையேறும் பொருட்டுப் பரமசிவன் சூலையை யருளித்து ஆட்கொள்ளப் பெற்ற உணர்வில்லாத சிறுமையேன் யான்.

அப்பூதிநாயனார்வசனம்.

சிவ சிவ ஓகோ தேவரீரை முன்னமே யின்னாரென் றறிந்துகொள்ளாமற் பேசினேனே சுவாமி.

விருத்தம்.

ஒப்புயர்வில்லா ஞானோதய வொளிர்பானுவேயோர்
திப்பிய உருவேயென்றன் தெய்வமே குருவேயுன்முன்
தப்புறுங்கொடியவார்த்தை சாற்றினேன் சிறியேனென்றன்
அப்பனே பொறுத்தேயாள்வாய் அடியிணைக் கமலம்போற்றி.

பிள்ளைகளைக் கூப்பிடும் வசனம்.

அப்பா மூத்த திருநாவுக்கரசே, அப்பா இளைய திருநாவுக்கரசே நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு நமது குலதெய்வமாகிய திருநாவுக்கரசு சுவாமிகள் வந்திருக்கின்றார். சீக்கிரம் உங்கள் தாயோடுவந்து அவருடைய திருவடியில் வணங்கிப் பாதப்ரக்ஷாளனஞ் செய்து அந்தத் தீர்த்தத்தை நாமெல்லோருஞ் சிரசின்மேல் புரோக்ஷித்துக்கொள்வோம் வாருங்கள்.

பிள்ளைகள்வசனம்.

அப்படியேவருகின்றோம் தந்தையே.

எல்லோரும் வந்து திருவடியில் வணங்கியபின் அப்பூதி வசனம்.

சுவாமிகளே தேவரீர் அடியேன்க்ருகத்தில் திருவமுது செய்தருளும்படி பிரார்த்திக்கின்றேன் சுவாமி.

தரு. இ - ம் முகாரி சாப்புதாளம்.

ஐயோ நானென்னசெய்வேன் ஈசா என்னை
 ஆதரிப்பாய் பர மேசா
மெய்யில் வெண்ணீறணியுங் கோவே அன்பர்
 விரும்பியன்தயளிக்குங் காவே
அரவங்கடித்திட நானே இப்போ
 தாவிகுலைகுலைந் தேனே
பரமகாருண்யச பேசா என்னைப்
 பரிந்தாள் கயிலையில் வாசா
அப்பருக்கு மனங் களிக்க நாங்கள்
 அறுசுவையோடமு தளிக்க
செப்பிவந்தேனிலை மறக்க கையில்
 தீண்டிற்றுப்பாம்புயிர் வெறுக்க

தம்பியைப்பார்த்துச்சொல் விருத்தம்.

பாதனைப்போல வென்பால் பரிவுள்ள தம்பியேகேள்
விரைவுடனிலையறுக்கும் வேளையிற்பாம்பொன் கையில்
தூரிதமாய்க்கடித்ததம்பீ நாஞ்சோகதாபங்கள்மீறி
பெருவிடந்தலைக்கேறிற்று பேச்சழிந்துயிர் போமாறே.

இவை திருநாவுக்கரசு சொல் தரு. இ - ம் காம்போதி, தாளம் ஆதி.

ஐயோ யிதற்கென்செய்வேன் சங்கரனே.
பையரவென்னுடைய கையிற் கடித்ததாமே (ஐயோ)
 குருநாதருக்கன்னங் கொடுக்க வாவழக்
 குருத்தரிம்போதிந்தக் கொடுமை வந்ததேவழே (ஐயோ)
மங்கைபங்களா நீசெய் மாய மிதோ
பங்கயன் மாற்கரிய பரனே எங்கள்மேல் வாதோ (ஐயோ)

வசனம்.

ஐயோ! அன்றே உமது கையிலேயா பாம்புகடித்தது சிவ சிவ இதென்ன காலம் "கிணறு வெட்டப்போனவிடத்தில் பூதம் புறப்பட்டது" என்பது போல எனது தமையனை அரவுகடித்த ஆபத்து நேர்ந்ததே இதற்குயானென்ன செய்வேன்.

தரு இ - ம் குல்லோஜ் ரூபக தாளம்.

சம்போசிவசங்கரமா தேவனே நானே
தமையனையொருத்தி பாம்புகடித்திடவுங்கேட்டேனே (சம்போ)
அம்புவியில்கொடுமை யார்சகிப் பாரோ
அன்னை தந்தையிதனைக்கேட்டா லுயிர்வகிப்பாரோ (சம்போ)
வந்தகோவிட்டவன்னை வாழையிலைபிரிக்கவைய
மகிழ்ந்து சென்றபோது பாம்புகடித்ததே ஐய (சம்போ)

இந்தத்தருணமெங்கள் குறையைப்போக்கவே வாவா
எத்துமருகல வைசியர்க்குயிரை யீந்திடுந் தேவா (சம்போ)

வசனம்.

தந்தைபோலெந்தனுக்கு எந்தநேரமும்புத்திகள் சொல்லிச்சந்தோஷத்தைதருவிக்கும் என் தமையனே நாம் வீட்டினின்றும் வந்தமாத்திரத்திலெல்லாம் இப்போது தக்ஷிப்போய்விட்டதே இதுவும் ஓர் கண்காட்சியோ ஐயா அண்ணனே நீர் போன விடத்தில் உமதுகையில் பாம்பு எவ்வாறு கடித்தது அண்ணனே.

மூத்த திருநாவுக்கரசு. தம்பிக்கு சொல் வசனம்.

அப்பா தம்பி அந்தபாம்பு கடித்தவேகத்தையும் அதனால் நான் படுந் துன்பத்தையும் என்னென்று சொல்லுவேன்.

தரு இ-ம் சங்கராபரணம் ஆதிதாளம்.

இந்தக்காலத்தில் பாம்பு என்றனைக் கடித்த தீம்பு
என்னென்று சொல்லுவேன் தம்பி தம்பி

தந்தங்களழுந்திடத் தாவிச்சீறியே கொத்திச்
சற்பனை செய்ததே தம்பி தம்பி

காளிகாளாத்திரி யமன் யமதூதியர்ம்
கடும்பற்களழுந்தலால் தம்பி தம்பி

மீளாதென்னுயிரினி தாளாதிவ்விடவேகம்
வெருவாதே நீ மனம் தம்பி தம்பி

வசனம்.

தேவாய்மைபோல் விளம்புமென் சொற்களும் ஆதரவுடைய அரிசனென் தம்பி எனக்கோ விஷவேகம் தலைக்கேறி பல்லும் கண்ணும் சரீரமும் நீலித்து விட்டது நாவுங்குளறுகின்றது எனக்கு ஒன்றுந் தோற்றவில்லை இச்சரீரத்தை நமது குருநாதன் அமுதுசெய்வதற்குத் தடைபடாமல் நமது அன்னைகையிற் கொடுத்துவிடு.

என்றுசொல்லி இருவரும்வீட்டிற்கு போகும்போது சொல்லிக்கொண்டே போகும் தரு. இ-ம் சாமா ரூபக தாளம்.

ஐயோஎன்னசெய்வேன் குருத்தறுக்கவந்தநானே
வெய்யசர்ப்பங்கடித்ததிப்போ கருத்துமழிந்தேனே

என்னையாளும் அப்பர்பசித்திருந்து கூசுவாரோ
அன்னைபிதாவென்னிலையை அறியாதேசுவாரோ

சர்ப்பந்தீண்டி விஷமும் எந்தன் தலைக்கேறுதே யிப்போ
அப்பர்க்கமுதினைப்படைக்க அடியேன்போவதெப்போ

வசனம்.

ஆ ஆ தம்பி எங்கேயிருக்கின்றாய் ஹா ஜகதீசா என்றுகீழேவிழுதல்

தரு.

ஆ ஆ சிவநாதாவென்னை அரவஞ்சீறித்தானே
அடியன்னையிற் கடித்ததுனைக் கபயமிதோநானே

என்று கீழே விழுந்து உயிர் விட்டபின் தம்பியாகிய இளைய திருநாவுக்கரசு சொல

தரு. இ—ம் நேசிகௌனாடி ரூபக தாளம்.

ஐயையோ என்னசெய்குவேன் நின் பார்முகத்தைப்பார்த்துய்குவேன்
தெய்வமே யீதுன் மாயமோ வழைக்கை நொந்தழுதாயமோ

வ—ம். ஐயையா அண்ணா ஐயையா.

தரு.

அன்பர்க்கருளி—இலைபறிக்கும்போதரவந்தீண்டுதல் தர்மமோ
என்பணித்திலச்சேவைமுன மேசையிற்செய்த கர்மமோ

வ—ம். ஹே ஜகதீசா ஐயையா அண்ணா.

தரு.

தந்தைதாயி—டமெல்விதஞ்சென்று சாற்றுவேன் கயிலாசனே
பந்தமற்றமெய்யன்பருளமொளிர் பகருமுமையேசனே

வசனம்.

ஆ! ஆ! அண்ணேன் அண்ணேன் என்ன இப்படி வீழ்ந்து விட்டீரே அண்ணேன் அண்ணேன சிவ சிவ குருநாதனுக்கு அமுது படைக்க குருத்தரிபைத்த இடத்தில் என் தமையனைக் கையில் பாம்பு கடித்து இறந்துவிட்டாரோ நான் உடற் பிறப்பற்ற மா பாவியானேனே ஐயா இதுவுந் தலைவிதியோ.

தரு. இ—ம் கமாசு. ஆதி தாளம்.

ஈதென்னவிதியோ எவர்செய்தசதியோ (ஈதெ)

காதகப்பெரும்பாம்பு கடித்திட்டதானே
போதகிரும் அண்ணன் வாதையாலிறந்தானே (ஈதெ)

தாயிடஞ்சென்று சாற்றுதற்கின்று
சாயுமோ வென்மனம் தமையனேயன்று (ஈதெ)

வ—ம். ஐயையா அண்ணேன் அண்ணேன்.

தரு.

தந்தையுங்கேட்டால் தாளவேமாட்டார்
இந்த சொல்சொல்ல எழுமோநாவெல்லா (ஈதெ)
சொரும்பழியாச்சே கூடிறந்தேபேச்சே
அடும்பணிமூச்சே அடக்கிற்றுச்சேச்சே (ஈதெ)

வசனம்,

சிவசங்கரப்போ எமது குருநாதன் பணிவிடையாக வுத்தவிடத்தில் இப் பேர்க்கொத்த ஆபத்து நேரிட்டதே.

தரு இ-ம் பியாகு ரூபககாளம்.

அடேன சங்காதரனேயென தன்னன் கையி — லிப்போ
அரவங்கடித்துயிர் மாளவே அமைத்தனைக் — கொப்போ
புரமூன்றெரித் தமரர்துயர் போக்கி பழுக் — கண்ணு
புத்துயி லாச் சிறிபேற்கருள் புரிவாயத்தி — வண்ணு
அண்ணனென் றனண்ணுவனை பரவுக்கிறை — யிடவோ
அடியேனுனைத் தொடர்ந்துவந்த தக்தோ துயர் — படவோ
என்னுயிர் துடிக்குதையோ வீசா கயி — லாசா
இத்துயர நீக்கமன யிலேயோ உமை — நேசா

வசனம்.

நாம் அழுதுக்கொண்டிருப்பதினால் காலதாமதமாகின்றது ஆதலால்தாய்தந்தையரிடஞ் சென்று அண்ணனிறந்த சமாச்சாரத்தைத் தெரிவித்து அவர்கள் கருத்தின் வண்ணம் நடந்துகொள்ளுவோம்.

என்று வீட்டுக்குப் போகும்போது சொல்லிக்கொண்டேபோகுந்
தரு இ-ம் கண்டா காளம் ரூபகம்.

ஐயோ என்ன செய்வேன் பாவியாகினேன் என் — னண்ணு
அரவங்கடித்துன் அருயிரிழந்தனையே — அண்ணு
வையமெல்லாம் புகழுமருவி வளர்ந்தோமே என் — னண்ணு
மனங்கலங்க எனைவிட்டு நீ மாண்டனையே — அண்ணு
உயிரொன் றுடலிரண்டென வுலவினோமென் — னண்ணு
உன்னுயிரை மாத்திரமின் றெழித்ததேபாம்பு — அண்ணு
அரவாலுயிர்விட்டனனென் றன்னைதந்தைக் — கண்ணு
அறைந்தால் பிழைப்பாரோ அவர் ஐயையோவென் — னண்ணு

பிள்ளையைக்கண்டவுடன் தாயாகிய சற்குணிவசனம்.

அப்பா இளையதிருநாவுக்கரசே ஏனழுகிறாய் அழாமற் சொல்லுவாயடா என் கண்மணியே.

இளையதிருநாவுக்கரசு சொல் அகவல், இ-ம் முகாரி

திங்கள்சேர் செஞ்சடைத் தேவன்திருத்தாட்
பங்கயந்தன்னைப் பலமுறைவணங்கி
அருமையாய்ப் பெற்ற அன்னையேகேளாய்
உரியவென்னண்ணன் உங்கள்சொற்படியே
மகிழ்வுடன்சென்று வாழையின் குருத்தை
புகழ்பெறக் கொய்திடும் போதினிற் கொடிய
பாம்பொன்று சீறிப் பல்லெலாமழுந்திப்
போம்படிக்கையிற் பொன்னெனக்கடிக்க

சற்குணி வசனம். ஆ ஆ ஐயோ ஐயோ மகனே.

இளையதிருநாவுக்கரசு கூற அகவல்.

போதினின்மிகவும் புலம்பிவாய் வரண்டு
காதுகளடைத்துக் கண்பஞ்சடைந்தே
உடலங் குருகி உரை தடுமாறிப்
படியினைவீழ்ந்து பதைத்துயிர்சோர்ந்தனன்

சற்குணி. தரு, இ—ம் அபரூபம் சாப்புதாளம்.

ஐயோ மகனே யென்னை அகன்றபோயினை உன்னை
அரவங்கடித்ததோடா மகனே மகனே மகனே

வெய்யிலிலேபட்ட சாயும் புழுவைப்போலே
கையுங்காலுந்துவண்டு மெய்தளர்ந்துவிழுந்தாயோடா மகனே மகனே மகனே

வாழையிலையறுத்தே மாண்டாயோபாம்பினால்
ஏழையாதுனைவிட்டே எப்படியிருப்பேனடா மகனே மகனே மகனே

கண்ணேயென் கண்மணியே கற்கண்டே சர்க்கரையே
மண்ணிதுனைப்பிரிந்தே வாழ்வேனோநான்றனே மகனே மகனே மகனே

அப்பருக்கமுதிட ஆசைகொண்டவனுக்கும்
இப்படிவரலாமோ ஈசனருளாற்பெற்ற மகனே மகனே மகனே

வசனம்.

அப்பா எங்கே விழ்ந்து கிடக்கிறான்.

இளைய திருநாவுக்கரசு அகவல்.

வாழைத்தோட்டத்து வடக்கிலென்னண்ணன்
ஏழைப்பிணம்போல் இருக்கிறான் தாயே
நாயினேன் நங்குரு நாதருக்காக
தூயவிக்குருத்தினைத் தூரிதமாய்க்கொணர்ந்தனன்

சற்குணி வசனம்.

அடா என் கண்மணியே அந்தக்கொடிய பாவி யரவானது தாவிக்கடிக்கக் கூவியழுது ஆவிசோர்ந்தாயோ இனி யாதுசெய்வேன்

என்றுசொல்லிக்கொண்டே போகுதல்

தரு. இ—ம் பியாகு ரூபக தாளம்.

அப்பனே என் கண்மணியே ஆருயிர்துறந்தாய் அன்னை
யாமெனை மறந்தாய்

செப்பருமா தவங்கண் முன்னஞ் செய்துமேதானே
சிலாவுனைப்பெற்றேனடா செல்வமா யானே இப்போ
தியங்கலானேனே (அப்ப)

பாம்புக்கிரையாக்கவோதான் பாலூட்டிப்புனையே
பாதுகாத்துவந்ததடா பாலாவின்றெனையே மிகு
பாவியாக்கினையோ (அப்ப)

வசனம். பிள்ளையைக்கண்டு சொல்லுதல்

தாயலரப் பிள்ளைமலர் தளராதோ பாலா
சற்றெழுந்தோர் மொழிசொல்லுவாய் சற்குண சீலா மனந்
தயங்குதே மேலா (அப்ப)

அப்பரிதைக்கேட்டாலமுதருந்தாரே யிப்போ
ஐயோவிக்குறைவரமுன் அடியாள்செய் தப்போ அர
னேயுனக் கொப்போ (அப்ப)

இளையதிருநாவுக்கரசு வசனம்.

இவ்வாழைக்குருத்தை யென் தந்தையாரிடங் கொடுத்து சமாச்சாரத்தைச் சொல்லப்போகின்றேன்.

அப்பூதி பிள்ளையைக்கண்டு வசனம்.

அப்பா இளையதிருநாவுக்கரசே உன்னுடன் வந்த தமையன் எங்கே நீ மாத்திரம் தனியே வந்தாயே?

இளையதிருநாவுக்கரசுவிருத்தம்.

கனிவுடனென்னைப்பெற்றுக் காக்கின்ற தந்தையேகேள்
மனமகிழ்ந்திலையறுக்கவந்தவென் னண்ணன் கையில்

அப்பூதி வசனம், ஆ ஆ என்ன என்ன;

இளையதிருநாவுக்கரசு விருத்தம்.

சினமுடனரவந்தீண்டத் திடீரெனவீழ்ந்தானித்தை
வினவியேதாயுஞ்சென்றாள் வீணுயிர்தரித்தேனனே.

அப்பூதி வசனம்.

சிவ சிவ மஹாதேவா உன்னுடைய திருவருள் இப்படியுமிருந்ததோ.

தரு இம் பியாகு ரூபகதாளம்.

ஐயையோ மகனே அருமைக்கண்மணியே இப்போ
தரவின்வாய்க்கிரையானாயோ ஆருயிர்த்துணையே

வையமீதரன் மலரடி நனேயே எற்றி
மகிழ்வொடுபெற்றவெமைமா பாவியாக்கினையே

அரனடியவர்க் கனமிடவென்று இலை
அறுத்தபோதுனக்குத்தீது அடுத்ததோவின்று,

அரஹரசிவனே அரவணிபரனே என
தன்பனரவால்மடிய அமைத்ததே தானே

என்று சொல்லிக்கொண்டேபோய் பிள்ளையைக்கண்டுவசனம்.

அடா எங்களை வாழ்விக்கவந்த கேழ்கிளர் குருந்தே நீ யிப்படி எங்களைக் கைவிட்டுத் தனியே பிரிவாயென்பதை நாங்கள் சொப்பனத்திலும் எண்ணவில்லையே.

தரு இ-ம் எதுகுலகாம்போதி ஆதி தாளம்.

ஐயோ என்னசெய்வேனப்பா மகனேநீயே
அறவத்தினாலிறந்தாயே
கையுநடுக்குதே மெய்யுந்துடிக்குதே (ஐயோ)

என்வயிறுபற்றியெரி யுதனல்போலே
என்செய்வேன் புவிமேலே
முன்புரிதீவினைவந்து மூண்டதித்துயர் தந்து (ஐயோ)

பாவியெனைப்போலேயிந்த பாரெங்குந்தேடி
பார்க்கப்போகுமோ நாடி
ஆவிமிகச்சோருதே அறிவதுதான்பெருதே (ஐயோ)

எங்களுக்கேயருங்கடன் இயற்றுவானென்று
எண்ணியிருந்தோ மின்று
மங்கியழவிட்டாயே மரணத்துக்குட்பட்டாயே (ஐயோ)

வசனம்:

அப்பா தேடற்கரிய திரவியமே உன்னைப்பாம்பின்வாய்க் கிரைகொடுத்து யெப்படித்தணிவேனடா,

கண்ணி, இ-ம் சாமா, தா-ம் ரூபகம்.

பாலா உன்னைப் பரிகொடுத்தே யிந்தப்
பாரிலிருப் பேனோ
சகிப் பேனோ
வகிப் பேனோ மகனே
பற்றுதே குக்ஷி பற்றுதே குக்ஷி பற்றுதே பற்றுதே பற்றுதே.

கங்கை யணிந்திடுங் கண்ணுதலை யன்பாய்க்
கருதினேன் நானே
என்றன் கோனே
பொறுக் கேனே மகனே
கலங்குதே மனங் கலங்குதே மனங் கலங்குதே கலங்குதே கலங்குதே

அப்பருக்கமுத ளிக்கவாழைக்குருத்
தரித்துவந் தாயே
அந்தோ நீயே
மடிந் தாயே மகனே
அப்பனே என்றன் அப்பனே என்றன் அப்பனே அப்பனே அப்பனே.

சற்குணி வசனம்.

அப்பா அடே என்புத்திரசிகாமணியே நான் முற்காலத்தில் என்னபாத கஞ் செய்தேனோ இப்போது உன்னை பாம்புக்குக் கொடுத்து அழும்படி நேர்ந்ததே.

தரு இம் ஆகிரி ரூபகதாளம்.

என நான்செய்குவேன் எப்படி சகிப்பேன் மகனே உன்னை
அன்னமாகவே அவுக்கிரைகொடுத்தேனோ மகனே
முன்னஞ்செய்பழிவந்து மூண்டதோ இப்பகல் மகனே அன்றி
அவாகனனுனக் கமைத்தவிதியிதுவோ மகனே
பெற்றவயிறுமிகப் பற்றியெறியுதடா மகனே இப்போ
நமரங்கேளோர் மொழிசாற்ற மனமிலேயோ மகனே
மேல் நடைப்பழக்கி மடிமேல்வைத்துவளர்த்தேன்மகனே இங்குப்
மேற்படுக்கயான்பார்க்க விதிவசமோ மகனே
உன்னைப்பறிகொடுத்து உயிர்தரித்திருப்பேனோ மகனே இந்த
அன்னைமுகம்பார்த்து அம்மாவெனச் சொல்லாயோ மகனே
மலைமகள் கொழுநனை வழுத்தடியவர்க்கன்னம் மகனே உதவ
இல்லிருக்கும்போது இக்கதிசேர்ந்ததோ மகனே.

வசனம்.

அப்பா புத்திர சிகாமணியே நமது குருசுவாமிக்கு அமுதளிக்க வாழைக்குருத்து அரிந்துகொண்டுவரப்போனபோது வழியில் ஏதேனுந் துற்சகுனங்கண்டாயோ நீவருவதற்குள் இக்கொடிய துர்மரணம் நேர்ந்ததே.

தரு இம் சாமா சாப்புதாளம்

என்னசெய்வேன் எதுசெய்வேன் இவ்விதிக்கு நான்முனே
பன்னகபூ ஷணுகொடும் பாதகியா னேனே
அப்பர்க்கமுதுதவ இலை அறுக்கச்சென்றனையே சீலா
செப்பருமரவான்மாளத் தீவினையேதோவென் பாலா

உன்முகத்தைக்காணமனம் உருகுதேவோகோவெங்குய்வேன்
என்குலம்விளங்கவந்த என்சுதனேஇனியென்செய்வேன்

பெற்றவயிறக்கினிபோல் பேதையேற்குப் பற்றுதடா
நற்றவமேயின்றேடேயிங் நாயேனுற வற்றதடா

ஐயையோவென்செய்குவேனே அரவாலிறக்கப்பட்டாயே
வையவெமையேயின்றிங்கு நடுத்தெருவிலேவிட்டாயே.

அப்பூதி வசனம்.

எங்களருமருந்தென்ன திருமகனே நமது குருநாதன் அமுதுகொள்ள இலைகொய்யப்போனவிடத்தில் பாம்புகடித்துயிர்மாய்ந்ததை அப்பமூர்த்திகளே றிவாராயின் செப்பமாய் அமுதுசெய்யாரே நாங்களெப்படி உய்வோம்.

தரு இ ம் முகாரி திரிபுடைதாளம்.

ஐயோ விதற்கென்னசெய்குவேன் நானே
ஆர்முகத்தைப்பார்த்தினி உய்கு வேனே (ஐயோ)
பையரவணிந்தொளிர் பரனேநின்னருளீதோ
பாலனிறக்கமுனம் பாவிநோற்ற நோன்பேதோ (ஐயோ)

அப்பர்க்கமுதை நீ யுதவ வென்று
அறுக்கப்போனயே குறுத் தின்று

ஒப்பிலராச்சிறி யுடனேகடித்ததோ
ஓகோ கோ கோ நின்றன் உடலந்துடித்ததோ (ஐயோ)

பாவியென்றேயெனை யிகழ்ந்தாயோ
பரன்பதமெய்தி மகிழ்ந்தாயோ

ஆவிபதருதேயென் அங்கந்துடிக்குதே
அப்பாவுன்னெழில்காண ஆசைதான்கொடுக்குதே (ஐயோ)

எங்கள் துயரமதைத் தீராயோ
எழுந்தொருமுத்தமிப்போதே தாராயோ

சங்கராசம்போசதாசிவனே மெய்யா
தமியேம்சுதனை நீ தந்தருள்வாய் ஐயா (ஐயோ)

சற்குணிவசனம்.

அடா மகனே குருவுக்கு அமுதுபடைக்கக் குருத்தரிந்து கொண்டுவருநேனென்று சொல்லிப்போன உனக்கு இந்த அவயிர்த்தியு வரலாமோ என்வயிறு யெரியுதே தெய்வமே.

தரு - இ - ம். ஆகிரி ஆதிதாளம்.

ஐயோ மகனே அரவாலுயிர்
மடிந்தாயோபாலா (ஐயோ)

கையின் மழுமானேந்துங் கத்தனடியார்க்கென்று
கருதியிலை கொய்போதிக் கதிவந்துற்றதேயின்று
காலமோ (ஐயோ)

மார்மேலுந் தோண்மேலும் மடிமேலுமாவுனையே
வைத்துவளர்த்தவெனை மாபாவியாக்கினையே
மணியே (ஐயோ)

பத்துமாதஞ்சுமந்து பெற்ற வயிறுசெய்த
பாதகமோகொடும் பாம்பின்வாய் நீ யெய்த
பாலகா (ஐயோ)

குருவுக்கமு துதவக் குருத்துக்கேகும்போதப்போ
கொடுஞ் சகுனமாச்சுதோ குமரவாய்திறந்திப்போ
கூறுவாய் (ஐயோ)

சற்குணிவசனம்.

ஐயோ மகனே உன்னை பத்துமாதம் சுமந்து பெற்ற என்வயிரானது குபீர் குபீரென்று எரிகின்றதே நீ வருந்தாதே யென்று உன்னழகிய வாயைத்திறந்து ஒருவார்த்தை சொல்ல மாட்டாயா.

தரு - இ - ம். சாமா - ஆதிதாளம்.

ஐயோமகனே நானே அரும்பாவியாகினேனே
வெய்யர வுன்னைச்சீறி கையிற்கழக்கமீறி (ஐயோ)

பத்துமாதஞ் சுமந்து பெற்றவயிறமிப்போ
பற்றியெரியுதடா சித்தமிரங்காதொப்போ (ஐயோ)

கையிற் கிளிவளர்த்து வெய்ய பூனைவாயிட்ட
கதையதாயிற்றேயராக் கடிகக வென்றனைவிட்ட (ஐயோ)

குருநாதர்க்கமுதின்று கொடுக்கமனதிலெண்ணி
குருத்தறுக்கவேசென்றிக்கொடுமைக்காளானாய்மண்ணில் (ஐயோ)

அப்பூதி வசனம்.

மஹாதேவா நான் முற்காலத்தில் உமது அடியார்கட்கு அன்ன மிடாது யென்னகுற்றஞ் செய்தேனோதெரியவில்லையே.

தரு - இ - ம். தன்யாசி - ஏகதாளம்.

என்னபாதக மியற்றின ஞேயானே
இக்கதிக்காளானேனே (என்ன)

பன்னற்கரிய பரம தயாநிதி
பாதுகாத்தாளித்ததி (என்ன)

... ... பாலியாதிருந்தேனோ
பானே நின்னருள்தானோ (என்ன)

அன்பரும்பசியாற் றன்புறஞாயமோ
அநேனீசெய்மாயமோ (என்ன)

... ... தபரம்பொருளே
மாபாவியேற் ...ருளே (என்ன)

வசனம்.

பெண்ணேசற்குணி

" ஹரிணாபி ஹரேணாபி ப்ரஹ்மணாபிசுரைரபி
லலாடலிகிதாரேகா பரிமார்ஷ்டும் நஸக்யதே"

என்றபடி நம்முடையதலையெழுத்தை அரி ஹர ப்ரம்மாதிக ளாலேயும் தடுக்கமுடியாது ஆகையால் நீ வருந்தாதே சகீ.

தர்க்கம். தரு - இம். கமாசு - ஆதிதாளம்.

சற்குணி

இதுவோதலைவிதி என்ப்ராணநாதனே
இப்புவிதன்னிலே யாரும்பழிக்கவே
எய்தினன் எய்தினன் எய்தினன் எய்தினன் (இது)

அப்பூதி தரு,

ஊழ்வினை தவிர்ப்பவர் உலகினுண்டோமானே
தாழ்வடையாமல் நீ தைரியத்தோடிரு
சாற்றினன் சாற்றினன் சாற்றினன் சாற்றினன் (ஊழ்)

சற்குணி தரு.

...ற்றினாலும் மனம் தரிக்குமோ ப்ராணநாதா
...னக்காண்பேனோசந்தோஷம்பூண்பேனோ
சகியே... சகியேன் சகியேன் சகியேன் (இது)

அப்பூதி தரு.

சகியாதென்செய்யலாம் சங்கரன்அமைப்பினைக்
தன்றுவர் எவரிந்தத் தரணியில்மானே நீ
தளரேல் தளரேல் தளரேல் தளரேல் (ஊழ்)

சற்குணி தரு.

தனாசாமலிருந்தாலும் தழல்வயிற்றினிற்றேன்றி
தகிக்குதென் செய்குவேன் சஞ்சலப்படிமனக்
தாளுமோ தாளுமோ தாளுமோ தாளுமோ (இது)

அப்பூதி தரு.

தாளாதழுதால்மகன் தான்வருவானோமானே
மாளாதிருந்தோரிந்த வையகத்துண்டோவென்கண்
மணியே மணியே மணியே மணியே (ஊழ்)

சற்குணி தரு இ-ம். கா-குறிஞ்சி அடதாளம்.

சங்கர சம்போ என் தனையனுமிப்போ
சர்ப்பங்கடித்துயிர் தான்மாண்டதொப்போ (சங்க)

குருநாதற்கன்னங் கொடுத்திட வென்று
குருத்தறுக்கச் செல்ல குறைவந்ததின்று (சங்க)

பாலனுமாளவென் பவஞ்செய்தேனிள
பரனேயென்றுயதம் பரிந்தென்னையாள (சங்க)

தனியளாய் நின்று தவிக்கின்றேன்பாவி
சஞ்சல நீக்கவே சதியிது மேவி (சங்க)

அப்பூதி வசனம்.

அடாபிள்ளைகலி தீர்க்கப்பிறந்த பெருந்தகையே நாங்கள் உயிரற்றவெற்றுடல்போல் துயரக்கடலில் தோய்தல் உனக்கோர் விளையாட்டோ.

தரு - இ - ம். அமீருகல்யாணி ஆதிதாளம்.

இத்ததிநீவந்தாளா யிலகிலெமெண்டோளா (இத்த)

புத்திரசோகமென் சித்தமதையிப்போ
மெத்தவும்வருத்துதே அத்தாவுனக்கொப்போ (இத்த)

அன்பர்க்கமுதிட ஆவலாய்ச்சென்றவென்
இன்பச்சுதன்றனக் கெப்படிவந்ததென் (இத்த)

அடியர்க்கெளியோனென் றறையுமறைபொய்யோ
படியிலெனைப்போன்மாப் பாவிகளுண்டோஐயோ (இத்த)

பாவியரவென்றன் பாலனுயிர் வாங்கக்
கூவியழுமென்றன் குறையனைத்துநீங்க (இத்த)

வசனம்.

எனதிரு கண்போன்ற எந்தலே உலகத்தில் தருமசிந்தையுடையோர் இருமை இன்பம் பெறுவர் என்பது என்மட்டில் பொய்க்கும்படி நீபாம்பின்வாய்ப் பட்டிலையோ என்செய்வேன் என்செய்வேன்.

கண்ணி – இ-ம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

அப்பா என்னசெய்வேனடா கண்ணின் மணியே அணியே
அப்பருக்கமுதை செப்பமாயளிக்க
ஒப்பிச்சென்றவனக் கிப்படிநேர்ந்ததே

கண்ணே என்னகாலம் வந்ததடா கரும்பே அரும்பே
கத்தனடியாரை நித்தமும்பூஜிக்கும்
சுத்த மனமுள புத்திரனே அந்தோ

பாலா பரன்திருவருளிதோ அறியேன் குறியேன்
பாதகநான்முன மேதிழைத்திட்டேனோ
தீதுறும்பாம்பின்வாய்ப் போதவேநீபட்டாய்.

சற்குணிவசனம்.

அப்பா புத்திரரத்தினமே இப்பொழுதாவது வாயைத்திறந்து ஒருவார்த்தை சொல்லமாட்டாயோ ஐயோ.

தரு - இ. ம் புன்னாகவராளி ஆதிதாளம்.

வாடா என் கண்ணின்மணியே எழுந்துமுத்தந்
தாடா என் கண்ணின்மணியே

தோடார் செவிப்பரன் மெய்த் தொண்டர்மனங்களிக்கச்
சொல்லுதற்கருமறு சுவையோடமு தளிக்க (வாடா)

அப்பா யிதென்னகாலம் உன்றனுக்கேதான்
இப்போது வந்தகோலம்

வெப்பாரரவமிகு வேகத்துடனே மேவி
விரும்பியிலை கொய்போதுன் மெய்யிற்றீண்டிற்றோ தாவி (வாடா)

பாலாவென்மீது வர்மமோ யான் பெற்றகுண
சீலாமுன்செய்த கர்மமோ

ஆலாலமுண்ட அரன் அமைத்தவண்ணமாச்சுதே
அடியவனெண்ணமெல்லாம் அவலமாய்ப்போச்சுதோ (வாடா)

பாவிப்பாம்புன்னைச்சிரியே இலேசொய்போதிற்
ருவிற்றீண்டிற்ரே மீறியே
ஆவிபறிபெமைக் கூவியழுதனையோ
அரனடியிணைகளை அன்பாய்த்தொழுதனையோ (வாடா)
அப்பரறிந்தாலென்சொல்வாரோ அமுதருந்த
ஒப்பாதுடனே செல்வாரோ
செப்பருமாதவங்கள் செய்துனைப்பெற்ருே மன்று
தியங்கவேயெமைத்தெருவில்விட்டாயே யின்று (வாடா)

அப்பூதி பெண்ணேசற்குணி கீ

தரு - இம். தேசிகதோடி - ரூபகதாளம்.

எனழுகிருய் மடதே எனழுகிருய்
ஞானநாயகனுரன்று தானமைத்ததாகுமின்று (என)
பண்டுசெய்வினைகள்நம்மைப் பற்றியதாகுமேயிம்மை
கண்டுநேர்மொழியினளே கலங்குதலொழியிவ்வேளை (என)
ஈசனமைத்திட்டவாறு எய்திடுமதனைத்தேறு
மாசிலாமணியேபெண்ணே வாட்டமுற்றிடேல்நீகண்ணே (என)
அண்டினேர்தமைமறவுதோமோ ஆனைநாம்வதைசெய்தோமோ
வண்டமர்பூங்குழல்மானே வந்ததித்துயரந்தானே (என
அப்பர் பசியைத்தணிக்க அன்புடன் அமுதளிக்க
இப்போதே பேருவோம்வாராய் ஈசனருளென்தேராய் (என)

வசனம்.

என்றுரைத்துக்கிசைந்த மனைவியே உன்வருத்தத்தை யொழிப்பாயாக மது புத்திரனுகிய இந்தச்சவத்தை வீட்டுப்புறத்து முற்றத்தில் ஓர் பாயால் மறைத்துவைத்து விட்டு சிக்கிரம் அப்பமூர்த்திகளுக்கு அமுதுபடை ப்போம் வருவாய் பெண்ணே.

சற்குணிவசனம்.

அப்படியே வருகிறேன்நாதா.

என்று சொல்லி சவத்தை மறைத்துவிட்டு இருவரும்வந்து அப்பமூர்த்திக ளைப்பார்த்து அப்பூதிவசனம்

சுவாமிகளே யெழுந்துவந்து திருவமுது செய்தருளவேண்டும்.

அப்பர்வசனம்.

அப்படியேவருகின்ருேம்.

அப்பர் பூஜையிலுட்கார்ந்து சற்றுப் பொறுத்துச்சொல் வசனம்.

அன்பர்களே இதோ விபூதிதருகின்றேம் பெற்றுக் கொள்ளுங்கள்.

அப்பூதியும் சற்குணியும் விபூதியைப் பெற்றுக்கொண்டு
இளையபிள்ளையைப்பார்த்து வசனம்.

அப்பா இளைய திருநாவுக்கரசே நீயும் நமது குருமூர்த்திகளை வணங்கி விபூதி பெற்றுக்கொள்ளுவாயாக.

அப்பர்வசனம்.

நாம் இவர்கட்கு முன்னே விபூதிசாற்றும்படி உம்முடைய சிரேஷ்ட புத்திரனை வருவியும்.

அப்பூதிவசனம்.

சுவாமிகளே அடியேனுடைய சிரேஷ்டகுமாரன் இப்போது இவ்வி. த்திற்கு உதவியாக மாட்டான்.

அப்பர் வசனம்.

சிவ சிவ அவன் என்னசெய்தான் உண்மையைச்சொல்லும்.

என்றவுடன் அப்பூதியும் சற்குணியும் தனியேவந்து
வியசனப்படுதல்.

அப்பூதி தரு இம் சாமா சாபுதாளம்.

இனியென்னசொல்வேன் எவ்விதஞ்செய்வேன்
தனியனுய்கின்றே தவிக்கின்றேனின்றே (இனி)

சற்குணி தரு இ-ம் செஞ்சுருட்டி ரூபகதாளம்,

நசனே யிதென்னமாயம் எய்தியதெமக்கபாயம் (நச)
மோசமானெஞ்சுதன் மான் மூண்டதோமுன்வினை நீள
மாகிலாஉமைபன் காளா மைந்தனைத்தருவாய் மீள (நச)

அப்பூதி தரு

அப்பரென்சுதனை அழைக்கின்றாரிதனை
எப்படிச்சகிப்பேன் ஏதெனச்சகிப்பேன் (இனி)

சற்குணி தரு

பாவியெனைப்போலு மெந்த பாரினுங்கிடையார் மூந்த
உவியமூதிட வந்த குறைதவிர்த்தருளென் சொந்த (நச)

அப்பூதி தரு

சங்காசம்போ தமியேன்மேல் வம்போ
பொங்கமோடன்னம் புசித்திலரின்னம் (இனி)

சற்குணி தரு

பொன்னிறச்சடையினனே புத்திரசோகத்தால் நானே
இன்னலுற்றலைகின்றேனே இந்தநிலைதான் நீ தானே (ஈச)

அப்பூதி தரு

என்சுதன் மாண்டான் எனிலன்னம் வேண்டார்
என்பணிவோனே இப்பழிக்குநானே (இனி)

சற்குணி தரு

ஆலவமுதுண்டநாதா அருமறைமீதொளிர் பாதா
ஜாலஞ்செய்வலாமோ நீதா தவிக்கின்றேன் சுதனைத்தாதா (ஈச)

அப்பூதி தரு

பாலனும்வாரான் பசியதைத்தீரான்
ஆலமுண்டோனே அருள்செய் நீ தானே (இனி)

வசனம்.

பெண்ணே நாம் வருந்துவதில் லாபமென்ன நமது குருமூர்த்திகளிடத்தில் உண்மையைத் தெரிவித்து அவர் குறிப்பின்வண்ணம் நடந்துகொள்ளுவோம்,

என்று அப்பரிடம் வந்து வசனம்.

எங்களை யாட்கொள்ள எழுந்தருளிய சுவாமிகளே அடியேம் புத்திரன் சுவாமிகளுக்குத் திருவமுது படைப்பதற்கு தோட்டத்திற்குச்சென்று வாழைக்குருத்து அரிந்துகொண்டுவரப்போனவிடத்தில் அவன்கையில் பாம்பு கடித்து இறந்துவிட்டான். அந்தச்சமாச்சாரம் தேவரீர் அறிவீர்களாயின் திருவமுது செய்வதற்குத் தடைபடுமென்னுங்கருத்தால் நாங்கள் அவனைப்பாயால்மறைத்து வைத்திருக்கின்றோம். இதுவே எங்களுடைய உண்மை.

அப்பர் வசனம்.

நீர் செய்தது நன்றாயிருக்கின்றது. இப்படி வேறுயார் செய்வார். சிவ சிவ நல்லது நீங்கள் அந்தச் சவத்தை யெடுத்துக்கொண்டு கோவிலுக்குள் வாருங்கள்.

அப்பூதி வசனம்.

அப்படியே வருகின்றோம் சுவாமி.

என்று பிள்ளையை எடுத்துக்கொண்டு கோவிலுக்குள் போகிறது

அப்பர் - பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

"ஒன்றுகொலா மவர் சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுயரும்மதிசூடுவ
தொன்றுகொலாமிடுவெண்டலைகையது
வொன்றுகொலாமவரூர்வதுதானே.

பத்துக்கொலாமவர்பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுக்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே" திருச்சிற்றம்பலம்

வசனம். அரஹர மஹா தேவா ரக்ஷி ரக்ஷி.

என்று சொன்னவுடன் பிள்ளை உயிர்த்தெழுந்து சொல்

தரு இம் எதுகுலகாம்போதி ரூபகதாளம்.

பரமனைப்பணிநீதா பற்றகன்றௌளிர்பாதா
பாலனேற்குயிரளித்த பரமசற்குரு நாதா
வரமருள்புரிஐயா வணங்கினேனுனைமெய்யா
மாசிலாவெண்ணீற்றௌடக்கமணிபுனைந்திடுந்துய்யா
அன்னைதந்தையுநீயே யன்றிவேறார்சேயே
ஆவலோடுன் பூமலர்த்தாள் அடைந்தனனுன்வாயே
என்னுளத்தினிதேனே ஈசனைப்புகழ்வோனே
ஏழையேனையாதரித்தாள் இலகிடுமெங்கோனே

வசனம்.

எனக்கு உயிர்வாழ்வைத்தந்தருளிய சுவாமிகளே அடியேன் இதோ உமது திருவடியில் வணங்குகின்றேன்.

அப்பர் வசனம்.

சுகஜீவியாக விருப்பாயாக இதோ உன்னுடைய நெற்றியில் விபூதியணிகின்றோம்.

அப்பூதி வசனம்

எங்களை இரக்ஷிக்கும்பொருட்டு எழுந்தருளிய சுவாமிகளே தேவர்திருவமுது செய்யாது காலம்நீடிக்கின்றமையைக் குறித்து எங்கள்சிந்தைநொந்தயர்கின்றது. கிருபை செய்யவேண்டும்.

அப்பர் வசனம்.

ஆகா இவர்களுடைய அன்பை என்னென்று சொல்லுவேன். தங்கள் புத்திரன் விஷம் நீங்கிப் பிழைத்தமையைக் கண்டும் அதைக்குறித்துச் சந்தோஷியாமல் நாம் திருவமுது செய்யாமையைக்கண்டு மனம் வருந்துகின்றார்களே ஆஹா! ஐயா அப்பூதியடிகளே அப்படியே திருவமுதுசெய்யவருகின்றோம வாரும்.

என்றுவீட்டுக்கு வந்து திருவமுதுசெய்தபிறகு அப்பர் வசனம்.

அன்புருவாகும் அப்பூதியடிகளே நாம் சிவஸ்தலங்கள் பலவற்றிற்குஞ் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வருவதாக வந்தோம். உம்முடைய

யவீட்டில் சில நாள் தங்கியிருந்தோம். இனி திருப்பழன முதலாகிய ஸ்தலங்கள் தோறுஞ் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வருகிறோம். நீர் உமது கிருகத்திலேயே மனைவிமக்களோடு சுகசீவிகளாயிரும்.

அப்பூதி வசனம்.

சுவாமி திருக்குறிப்பின் வண்ணம் நடந்துகொள்ளுகின்றோம்.

அப்பர் அடியாருக்கு வசனம்.

அடியார்களே இந்த அப்பூதி நாயனாருடைய மெய்யன்பை நான் எவ்வாறு புகழ்ந்து சொல்லுவேன். நமது பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானிடத்திலேயே அவர்மெய்யன்பை வெளிப்படுத்தவேண்டும். வாரும் திருப்பழனத்துக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ் செய்வோம்.

அடியார்கள் வசனம்.

அப்படியே வருகின்றோம் சுவாமி.

திருப்பழனத்துக் கோவிலுக்குள் போய் அப்பர் வசனம்.

அர ஹர மஹா தேவா சிவ சங்கரபிரபோ.

பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்கால் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலி மெலிய அழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்ற சேவடியாய்க் கோடியையே"

திருச்சிற்றம்பலம்.

அடியார்கள் வசனம்.

ஆகா பார்த்தீர்களா இந்தத்திருநாவுக்கரசு நாயனாருக்கு அந்த அப்பூதிநாயனாரிடத்திருந்த மெய்யன்பைத தாம் பாடியருளிய திருப்பதிகத்தில் அந்த அப்பூதி நாயனாரைச் சிறப்பித்துப்பாடி யருளினார். ஆகா என்ன அன்பு என்ன அன்பு.

அப்பர் வசனம்

அடியார்களே நாம் திருச்சோற்றுத் துறை யென்னும் ஸ்தலத்திற்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்வோம் வாருங்கள்.

வாழி

ஏருறு நாலாரணங்கள் இலகி — வாழ்கவே
இசைமிகும் வானோரகத்தனர் யென்றும் — வாழ்கவே
சீருறுயானினமுகில் செழித்து — வாழ்கவே
செய்ய சைவ மன்னர் செங்கோல் — வாழ்கவே

வாருறும் வெண்ணீற் ருேடக்கமணியும் வாழ்கவே
வைசியர் குத்திரர் மனமகிழ்ந்து வாழ்கவே
பாருறுமப்பூதி காதையடிப்போர் வாழ்கவே
பரிவுடனிதை நடாத்தும் பத்தர் வாழ்கவே
நாருறும் வயித்யநாத நன்மால் வாழ்கவே
நாளுமவர் மாணுக்கர்கள் நன்னெறி வாழ்கவே
தாருறுஞ் சிவசன்மார்க்கசபையும் வாழ்கவே
சேத்தரும் பிராஞ்சகுடி தழைத்து வாழ்கவே

மங்களம்.

மங்களம் மகாதேவர்க்கும் மலைமகள் தனக்குந்திவ்ய
மங்களம் ஸ்ரீ அப்பூதிமான்மிய மாமின்னூற்கும்
மங்களம் குருநாதப்பேர் வாய்ந்திடு மகிபனுக்கும்
மங்களம் வைத்தியநாதமாலின் மாணுக்கருக்கே.

ஸ்ரீ வசீஸமான்மிய மூன்றும் பிரிவில்

அப்பூதிநாயனர் சரித்திரம்

முற்றுப்பெற்றது.